செய்தி வெளியீடு எண் : 25 நாள் :14.04.2018

**தேனி மாவட்டம்**
**நீத்தார் நினைவு தினத்தை முன்னிட்டு**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**வீர மரணம் அடைந்த தீயணைப்பு வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்:-**

*****

தேனியில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் இன்று (14.04.2018) நீத்தார் நினைவு தினத்தை முன்னிட்டு, மீட்பு பணிகளின் போது வீரமடைந்த தீயணைப்பு வீரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் மலர் வளையம் வைத்து, மௌன அஞ்சலி செலுத்தி, மரியாதை செலுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், 1944 ஆண்டு ஏப்ரல் 14 அன்று மும்பை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எஸ்.எஸ் போர்ட் ஸ்டைக்கின் என்ற கப்பல் தீவிபத்திற்குள்ளான போது, மும்பை தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்ட போது, கப்பலில் இருந்த 1200 டன் வெடிபொருட்கள் எதிர்பாரதவிதமாக வெடித்து சிதறியதில் 66 தீயணைப்பு வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். அவர்களின் நினைவாகவும், இந்தியா முழுவதும் தீயணைப்பு பணியின் போது வீர மரணமடைந்த தீயணைப்பு வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் ஏப்ரல்-14 அன்று தீயணைப்போர் தியாகிகள் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை துவங்கப்பட்ட பின்பு இதுநாள் வரை தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு மற்றும் மீட்பு பணியில் ஈடுபட்டு 31 தீயணைப்பு வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளனர். ஆண்டுதோறும் ஒரு தலைப்பின் கீழ் நாடு முழுவதும் ஒருவார காலம் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டு “தீயினால் ஏற்படும் இழப்பு தேசிய இழப்பு – தீ பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் பின்பற்றுவோம” என்ற தலைப்பின் கீழ் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை அலுவலர் திரு.தென்னரசு அவர்கள், மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சேது அவர்கள், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை உதவி அலுவலர் திரு.மணிகண்டன் அவர்கள், கண்காணிப்பாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**